DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

S.T.C-340/2022

Prosecution witness - PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present)

13.10.2025- 11.40 AM

முதல் விசாரணை:-

1. நான் பி.கீரந்தை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பியின் மனைவி. ஆஜர் எதிரிகள் இருவரும் எனக்கு உறவினர்கள்.

2. சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஊரில் சண்டை நடந்ததாக கிராமத்தில் பேசிக்கொண்டார்கள். யார் யாருக்கு என்று எனக்கு தெரியவில்லை. நான் சம்பவத்தன்று சிவகங்கை எனது மகளின் வீட்டிற்கு சென்று விட்டு 2 நாட்கள் கழித்து தான் ஊருக்கு வந்தேன். அப்போது தான் தெரியும். என்னை போலீசார் விசாரிக்கவில்லை

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: -**

நான் வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 சொல்லி தெரிந்து கொண்டேன் என்றாலும் சம்பவம் இடம் சென்று காயம்பட்ட அ.சா.1 ஐ சிகிச்சைக்காக மருததுவமனைக்கு அழைத்து சென்றதாகவும், போலீசார் விசாரித்தபோது தற்போது எதிரிகள் இருவரும் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால்

உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி அரசு, எதிர் தரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் கூறிய விபரங்களை நான் சொல்லச் சொல்ல தட்டச்சர் தட்டச்சு செய்த விபரங்கள் சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மா.உ.ம.நீ.ந, கடலாடி